## இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் - 2016

---

இலங்கை இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் 2016 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 1971 இன் 38 ஆம் இலக்க நிதிஅதிகாரச்சட்டத்தின் 13(1) மற்றும் 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தின் 29 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(6) பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கை திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதும் மீளாய்வாண்டின் கூட்டுத்தாபனத்தின் செயலாற்றல் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 2.2 நிதிக்கூற்றுக்கள்

---

### 2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

---

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பவற்றை 2018 ஏப்ரல் 19 ஆந் திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 கணக்கேடுகள் மற்றும் பதிவேடுகளைப் பராமரித்தல்

---

கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடாத்திச் செல்லப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்குரிய கணக்கேடுகளும் பதிவேடுகளும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் இருப்பு

---

கூட்டுத்தாபனத்தினால் இறுதியாக தயாரிக்கப்பட்டிருந்த 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காணப்படும் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சொத்துக்கள் | பெறுமதி |
|---|---|
| | ரூபா |
| நடைமுறையல்லாத சொத்துக்கள் | 1,713,458,355 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 449,150,463 |
| மொத்தச் சொத்துக்கள் | |
| | 2,162,608,818 |
| பொறுப்புக்கள் | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 864,474,891 |
| நடைமுறையல்லாத பொறுப்புக்கள் | 205,984,946 |
| | 1,070,459,837 |
| தேறிய சொத்துக்கள் / உரிமை | 1,092,148,981 |
| மொத்த பொறுப்புக்கள் | 2,162,608,818 |
| மொத்த வருமானம் | 2,597,580,607 |
| மொத்தச் செலவினம் | 2,857,498,081 |
| பற்றாக்குறை | |
| | (259,917,474) |

## 2.4 பெற வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவை கடன் மீதி ரூபா 214,407,034 ஆக இருந்தது. இம்மீதியில் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 44,144,301 தொகையும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 44,703,875 தொகையும் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 7,251,427 தொகையும் பகுப்பாய்வு செய்ய முடியாத மீதி ரூபா 18,768,308 தொகையும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) வெளி நிறுவனங்கள் மற்றும் நபர்களால் கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் குளிரூட்டிகள் மூலம் அதிகுளிரூட்டி வசதிகளை வழங்குவதற்காக வழங்கப்படும் மீன் இருப்பினை பொறுப்பேற்கும் போதும் அவற்றை பின்னர் வழங்குவதற்காகவும் முறையான நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. முகாமைத்துவத்தினால் குளிரூட்டிசாலை கட்டணங்களாக 2016 ஆகஸ்ட் வரை ரூபா 4,014,847 அறவிடப்பட வேண்டியிருக்கையில் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் அறவிடப்படாமல் காணப்படுவது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் ஆகியவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் ஆகியவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பந்தி | கூட்டுத்தாபன ஊழியர்கள் வரிசை அமைச்சிற்கோ அல்லது ஏனைய நிறுவனம் ஒன்றிற்கோ விடுவிக்கப்படுவதாயின், அதன் பொருட்டு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் மீளாய்வாண்டின் போது இரண்டு உத்தியோகத்தர்கள் வெளி நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டு சம்பளமும் படியுமாக ரூபா 397,446 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 24/2014 ஆம் இலக்கம் 2015 பெப்ரவரி 11 ஆந் திகதிய 5/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தரொருவர் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளராக நியமிக்கப்பட்டிருந்ததுடன், அந்த ஊழியருக்கு ஓய்வூதியத்துடன் வாழ்க்கை செலவின படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் பொது முகாமையாளருக்காக படிகளுடன் 2015 நவம்பர் முதல் 2016 திசெம்பர் வரை ரூபா 249,200 ஆன வாழ்க்கை செலவினப் படிகளும் சேர்த்துக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

## 2.6 நிறுவனத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டபூர்வ சம்பவங்கள்

மீளாய்வாண்டினது இறுதியளவில் பாவனைக்கு பொருத்தமற்ற நிலைமையிலும் காலாவதியான மீன்களை விற்பனை செய்த காரணத்தினாலும் வெளி நபர்களால் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக நீதிவான் நீதிமன்றங்களில் 04 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தின் கீழ் 1964 ஒக்டோபர் 01 ஆந் திகதிய 14/186 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி மற்றும் 2011 யூன் 30 ஆந் திகதிய 1712/21 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் என்பவற்றின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் ஆரம்ப நோக்கம் பின்வருமாறு சுருக்கித் தரப்பட்டுள்ளது.

- நேரடியாகவோ அல்லது அதிகாரம் பெற்ற முகவர்களினூடாகவோ கடலில் டிரோலர் இயந்திரங்களைப் பயன்படுத்தி மீன் பிடிக்கும் நடவடிக்கைகள், தயாரிக்கும் நடவடிக்கைகள் மற்றும் மொத்தமாகவோ சில்லறையாகவோ விற்பனை செய்தல் அல்லது விநியோக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், குளிர் அறைகள் அடங்கலாக மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் நங்கூரத் தளங்களை நிர்மாணித்தல், பராமரித்தல், மீன் மற்றும் மீன் உற்பத்திகளை இறக்குமதி செய்தலும் ஏற்றுமதி செய்தலும், கடற்றொழில் துறைக்குத் தேவையான உபகரணங்களையும் ஏனைய அவசியமான உபகரணங்களையும் இறக்குமதி செய்தலும் விற்பனை செய்தலும்.

- கடற்றொழில் திணைக்களம் அல்லது அரசாங்கத்தின் வேறெந்தத் திணைக்களத்திற்காகவும் மற்றும் அதன் பொருட்டும் கடற்றொழில் அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுதல், கடற்றொழில் துறைக்குப் படகுகளையும் ஏனைய சிறிய வள்ளங்களையும் பெறுதல், மீன்பிடிப் படகுகளைப் பழுதுபார்த்தல், மற்றும் பராமரிப்பிற்கான வசதிகளை வழங்குதல் மற்றும் மீன்பிடித்துறைக்கு அவசியமான உபகரணங்களை உற்பத்தி செய்தலும் விற்பனை செய்தலும்.

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கடற்றொழில் துறைமுகக் கூட்டுத்தாபனம், வரையறுக்கப்பட்ட சீ - நோர் மன்றம் மற்றும் இலங்கை தேசிய நீரியல்வாழ் உற்பத்தி அபிவிருத்தி அதிகாரசபை ஆகிய நிறுவனங்கள் கடற்றொழில் அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டதை அடுத்து கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்த நியதிச்சட்ட நோக்கங்கள் அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட ஏனைய நிறுவனங்களின் விடயப்பரப்பிற்கு ஒப்படைக்கப்பட்டதன் காரணமாக கடற்றொழில் கூட்டுத்தாபனத்தை ஸ்தாபிக்கும் போது கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த கடமைப் பொறுப்புக்களை திருத்துவது தொடர்பாகத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் பிரதான செயற்பாடுகளின் இலக்கினை நிறைவேற்றுவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டில் ரூபா 2,592 மில்லியன் செலவு செய்து 7200 மெற்றிக் தொன் மீன்கள் கொள்வனவு செய்வதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் ரூபா 1,381 மில்லியன் செலவிடப்பட்டு 3,320 மெற்றிக் தொன் மீன்கள் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் 3871 மெற்றிக் தொன் அதாவது 53 சதவீதமான மீன் தேவைப்பாட்டை நிறைவேற்ற முடியாதிருந்ததுடன், 7200 மெற்றிக்தொன் மீன் விற்பனை செய்து ரூபா 3,375 மில்லியன் வருமானத்தை பெறுவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 3329 மெற்றிக் தொன் மாத்திரம் விற்பனை செய்து ரூபா 1,915 மில்லியன் வருமானமொன்றை மாத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் விற்பனை இலக்கு 46 சதவீதத்தினால் அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தமை கூட்டுத்தாபனத்தின் பிரதான நோக்கமான சலுகை விலைக்கு நுகர்வோருக்கு வழங்குவதன் அன்றாடம் நுகர்வோரின் மீன் தேவைப்பாட்டை நிறைவேற்றும் செயற்பாட்டை பூர்த்தி செய்வதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

(ii) 26064 மெற்றிக் தொன் ஐஸ் விற்பனை செய்து ரூபா 107.76 மில்லியன் விற்பனை வருமானமொன்றை பெற்றுக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 11843 மெற்றிக் தொன் மாத்திரம் விற்பனை செய்யப்பட்டு ரூபா 44.95 மில்லியன் வருமானம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் திட்டமிடப்பட்டதன் பிரகாரம் 55 சதவீதம் ஐஸ் விற்பனை இலக்கை அடைய முடியாதிருந்தது.

(iii) குளிரூட்டிசாலை வருமானமாக ரூபா 60 மில்லியன் எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 14.47 மில்லியன் மாத்திரம் உழைக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்தில் காணப்படும் குளிரூட்டி வசதிகள் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(iv) மீளாய்வாண்டின் ரூபா 22 மில்லியன் செலவிடப்பட்டு 32 மீன் விற்பனை நிலையங்களை நிர்மாணித்து பொதுமக்கள் உரித்துக்கு வழங்க திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 4.28 மில்லியன் செலவு செய்து 11 விற்பனை நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

(இ) கடந்த 05 ஆண்டு காலப்பகுதியில் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் வியாபாரச் சந்தைப் பங்கு 1.1 சதவீதத்திலிருந்து 0.7 வரை குறைவடைந்திருந்ததுடன், அதற்கு காரணத்தை தேடி சந்தைப் பங்கினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக மீன் விற்பனையை நிலையாக பேணும் முகவராக நடவடிக்கை எடுத்தமை மற்றும் உயர் தரமான நுகர்வோர் சேவைகளை பேணிச் செல்லல் போன்ற நோக்கங்கள் நிறைவேற்றும் இயலுமை குறைவடைந்திருந்ததுடன் அக் கூட்டுத்தாபனத்தின் நிலைத்திரு தன்மைக்கு பாதகமான வகையில் தாக்கமளித்திருந்தது.

## 3.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஆம் ஆண்டின்போது ஏற்பட்ட ரூபா 2,558,028 பெறுமதியான பொதியிலடைக்கப்பட்ட பொருட் கையிருப்பு பற்றாக்குறை தொடர்பாக களஞ்சியப் பிரிவின் முகாமையாளருக்கு எதிராக நடாத்தப்பட்ட ஒழுக்காற்று பரிசோதனையின் போது அப்பற்றாக்குறை, உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு 2016 மார்ச் 09 ஆந் திகதி தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை அப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வைத்தியசாலைகளுக்காக மீன் வழங்கும் போது இடம்பெற்ற தவறு காரணமாக 2014 ஆகஸ்ட் 12 ஆந் திகதி வரையில் ரூபா 13.9 நிலுவைக் கடன் மீதியொன்று ஏற்படுத்தியமை தொடர்பாக இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் ஒழுக்க கட்டளைக் கோவையின் ''அ'' அட்டவணையின் கீழ் கடமை புறக்கணிப்பு அல்லது முறையற்ற செயற்பாடுகளில் ஈடுபடுதல் போன்ற தவறுகளின் கீழ் மூன்று உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட குற்றப்பத்திரிகைகளுக்காக வழங்கப்பட்டிருந்த பதில் தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாமல் இருந்தது. மேலும், அவர்களுக்கு எதிரான முறையான ஒழுக்காற்று பரிசோதனையொன்று மேற்கொள்வதற்கு 2015 பெப்ரவரி 19 ஆந் திகதி பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அத்தீர்மானம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 192,000 பண மோசடி அடங்கலாக 12 மோசடிகளுக்கான புகார்கள் பெறப்பட்டு 2001 பெப்ரவரி மாதத்தில் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல், வேலை இடை நிறுத்தம் செய்யப்பட்டிருந்த கூட்டுத்தாபனத்தின் உதவி முகாமையாளர் ஒருவர் 2001 செப்தம்பர் 03 ஆந திகதி மீண்டும் சேவையில் ஈடுபடுத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றில் பங்குபற்றுவதற்கு வெளிநாடு செல்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. மேலும் அந்த உத்தியோகத்தர் 2011 ஒக்டோபர் 03 முதல் II ஆந் தர நிறைவேற்றுதர முகாமையாளர் பதவிக்கும் 2011 ஒக்டோபர் 20 முதல் I ஆந் தர நிறைவேற்று முகாமையாளர் பதவிக்குமான பதவி உயர்வு வழங்கப்பட்டு 2015 ஆம் ஆண்டின் செப்தம்பர் 21 ஆந் திகதி முதல் அலுவலகத்தின் குளிரூட்டும் அறை முகாமையாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.

(ஈ) கூட்டுத்தாபனம் 08 மாவட்டங்களில் உடமையாக்கி கொண்ட ஏக்கர் 12.47 பேர்ச் உடைய 15 காணிகளைக் குறித்த நபர்களிடமிருந்து சட்டரீதியாக கையேற்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கடற்றொழில் கூட்டுத்தாபனத் தலைவருடன் தொடர்பு கொண்ட 2013 மார்ச் 06 ஆந் திகதிய NPC/1/2/6 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சின் தேசிய நிகழ்ச்சித்திட்ட மதியுரையாளரின் கடிதத்தின் பிரகாரம், ரூபா 15 மில்லியன் பெறுமதியான திருகோணமலை மீன் விற்பனைக் கூடம் 2013 மார்ச் 09 முதல் கூட்டுத்தாபனத்தால் சுவீகரிக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டபோதும், கணக்காய்வுத் திகதியான 2017 சனவரி வரை சுவீகரிப்புக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஊ) இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வு சபையினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் பிரகாரம் விற்பனைக்கான மீன்களது பௌதீகக் கையிருப்பை புத்தகப் பெறுமதியுடன் ஒப்பிடுகையில் 5,939 கிலோகிராம் குறைவு அவதானிக்கப்பட்டதுடன் அக்குறைவுக்குக் காரணமான விடயங்களைக் கண்டறிந்து குறித்த நபர்பகளிடமிருந்து அதனை அறவிடுவதற்கு 2016 திசெம்பர் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு முகாமையாளராகப் பணியாற்றி 11 குற்றங்களுக்குக் குற்றவாளியாகக் காணப்பட்டு, வேலை இடை நிறுத்தம் செய்யப்பட்டிருந்த போது ஒழுக்காற்றுப் பரிசோதனைக்கு உட்பட 2009 யூலை 07 ஆந் திகதி முதல் மீண்டும் சேவையில் 06 நிறைவேற்று தர முகாமையாளர் பதவிகளுக்காக நியமனஞ் செய்யப்பட்டிருந்தார்.

(ஏ) 2015 ஆம் ஆண்டின் போது 3 உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் மூலம் சுட்டிக் காண்பிக்கப்பட்ட நட்டங்கள் மற்றும் அறவிடப்பட வேண்டிய மீதிகள் முறையே ரூபா 8,356,253 மற்றும் ரூபா 5,139,900 தொகையை அறவிடுவதற்கு வழங்கப்பட்ட பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கும் முகாமை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.3 தொழிற்பாட்டு செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தில் மிகை ஊழியர் எண்ணிக்கையொன்று காணப்படல், உயர் முகாமைத்துவ பதவிகளில் இருக்கும் உத்தியோகத்தர்கள் குறுகிய காலத்தில் மாறுதல் போன்ற காரணங்கள் காரணமாக கூட்டுத்தாபனத்தின் திட்டம் அவ்வவ்போது மாற்றமடைதல் மற்றும் தொழிற்படு மூலதனத்தில் பிரச்சினையொன்று காணப்படல் என்பன கூட்டுத்தாபனம் 2015 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்தும் நட்டமடைவதற்கு பிரதான காரணங்களாக இருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்தை மீள அமைத்து இலாபகரமான வியாபாரமொன்றாக மாற்றும் நோக்கில் அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் சுயமாக ஓய்வுபெறும் முறையொன்றை செயற்படுத்தி 2016 மார்ச் 18 ஆந் திகதிய 02/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை பிரகாரம் 2016 மே 20 ஆந் திகதி 102 ஊழியர்கள் ஓய்வு பெறச் செய்தல் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. கூட்டுத்தாபனத்தை இலாபகரமான வியாபாரமொன்றாக மாற்றும் நோக்கத்தை அடைந்துகொள்வதற்காக ஏனைய திட்டங்கள் திட்டமிடப்பட்டிருக்கவில்லை.

(இ) கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான ரூபா 66,715,516 பெறுமதியான இரண்டு பலவழிக் கப்பல்கள் 2010 சனவரி 20 ஆந் திகதி முதல் மாதாந்தம் ரூபா 200,000 குத்தகை வாடகையில் 2 வருடங்களுக்காக தனியார் நிறுவனமொன்றுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த 02 கப்பல்களுக்காக 2011 சனவரி முதல் 2013 நவம்பர் வரை சட்ட உத்தியோகத்தரால் கணக்கிடப்பட்ட நிலுவை குத்தகை வாடகை ரூபா 6,000,000 ஐ அறவிடுவது தொடர்பாக இதுவரை சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

மேற்குறித்த இரண்டு கப்பல்கள் 2014 ஆம் ஆண்டின் போது போட்டி விலை கோரப்படாமல் தெரிவு செய்யப்பட்ட ஒரு குத்தகையாளருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2014 சனவரி முதல் செப்தெம்பர் வரை கப்பல்களுக்குரிய ரூபா 1,125,000 ஆன குத்தகைப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. குத்தகை பணத்தை அறவிடுதல் உரிய வகையில் மேற்கொள்வதற்குப் பதிலாக அந்த இரண்டு கப்பல்களையும் ரூபா 5,626,500 இற்கு விற்பனை செய்த காரணத்தால் கூட்டுத்தாபனம் ஸ்தாபிக்கப்பட்ட நோக்கமான நேரடியாக கடலில் கப்பல்களை ஈடுபடுத்தி மீன் பிடிக்கும் நடவடிக்கைக்குரிய நோக்கத்தை நிறைவேற்ற முடியாதிருந்தது.

(ஈ) மீன் விற்பனை மேற்கொள்ளும் 32 நிறைவேற்றுதர இடங்களில் 2014 ஆம் ஆண்டில் 28 நிறைவேற்றுத்தர இடங்களும் 2015 ஆம் ஆண்டில் 30 நிறைவேற்றுத்தர இடங்களும் 2016 ஆம் ஆண்டில் 27 நிறைவேற்றுதர இடங்களும் நட்டம் அடைந்திருந்ததுடன், முறையே அவ்வருடங்களில் ஏற்பட்டிருந்த மொத்த நட்டம் ரூபா 180,538,573 மற்றும் ரூபா 138,040,828 மற்றும் ரூபா 68,184,221 ஆக இருந்தன. 08 ஐஸ் இயந்திரசாலைகளும் 2015 ஆம் ஆண்டில் அடைந்திருந்த நட்டம் ரூபா 33,364,965 உம் 2016 ஆம் ஆண்டில் ரூபா 17,581,153 உமாக இருந்தன. கூட்டுத்தாபனத்தினால் நட்டத்தை குறைப்பதற்கான திட்டங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் பணிக்கொடை தொகை கொடுப்பனவு செய்யப்படாமை காரணமாக 2013 ஆம் ஆண்டிலும் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போதும் முறையே ரூபா 186,678, ரூபா 1,665,963 மற்றும் ரூபா 2,534,850 என வட்டி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியளவில் 250 மீன் விற்பனைக் கூடங்களை நிர்மாணிப்பதற்கு இலக்கிட்டு, அத் தேவையை நிறைவு செய்வதற்கென சாத்தியவள ஆய்வான்று மேற்கொள்ளப்படாமல் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் அரச வங்கி ஒன்றிலிருந்து பெறப்பட்ட ரூபா 100 மில்லியன் கடன் பெற்றுக்கொள்ளப்பட்டு அதற்காக ரூபா 26,283,673 வட்டி செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2016 ஆம் ஆண்டு வரை ரூபா 136,092,354 செலவிடப்பட்டு 172 விற்பனைக் கூடங்கள் மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டிருந்தன. போதியளவு மீன் விற்பனை காணப்படமை நெடுஞ்சாலைகள் விரிவுபடுத்தப்பட்டமை போன்ற காரணங்களினால் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதில் 75 விற்பனைக் கூடங்கள் மூடப்பட்டிருந்தன. மேலும் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு முன்னர் காணிகளின் உரித்தை சுவீகரிக்காததன் காரணமாக சட்டபூர்வச் சிக்கல்களைத் தீர்த்து வைப்பதற்கு அதிக கிரயம் செலவிட நேர்ந்தது.

### 3.4 பயன்படுத்தப்படாததும் குறைப் பயன்பாட்டிலான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்திற்குரிய அநுராதபுரவில் அமைந்துள்ள பழைய உப உற்பத்தி தொழிற்சாலையொன்று, பொலன்னறுவ, இரத்தினபுரியில் அமைந்துள்ள 02 ஐஸ் தொழிற்சாலைகள் புத்தளத்தில் அமைந்தள்ள ஐஸ் இயந்திரசாலை கூடமொன்று, உத்தியோகபூர்வ விடுதியொன்றும் கருவாடு உலர வைக்கும் பிரிவொன்று,

திருகோணமலையில் அமைந்துள்ள வலை தயாரிக்கும் நிலையமொன்றும் மட்டக்களப்பில் அமைந்துள்ள 03 கொள்கலன் குளிரூட்டிகள் பயன்படுத்தப்படாமல் 02 ஆண்டுகளுக்கு 29 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) சபைக்குரிய 20 வாகனங்கள் கூட்டுத்தாபன வளவிலும் நிறைவேற்று இடங்களிலும் விளைவற்றுக் காணப்படுவதாக உள்ளகக் கணக்காய்வு அறிக்கை மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) கூட்டுத்தாபனத்தால் தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டத்தில் ''தூய வள வலயம'' மற்றும் ஏற்றுக் கொண்ட சர்வதேச விதிகளுக்கு இணங்க இதற்கு வெளியே மீன் பிடிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுதல், வெளிநாட்டு சந்தைகளில் மீன் விற்பனை மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு உற்பத்திகள் மற்றும் விநியோகத்தர்களை முகவராக்குதல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக தந்திரோபாய திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் 2014 – 2016 ஆம் ஆண்டுகளுக்கான கூட்டிணைந்த திட்டத்தின் நிறுவனங்களாகவும் விட்டு நுகர்வோர்களாகவும் இலக்கிடப்பட்ட சந்தைகளை இனங்காணப்பட முடியுமாக இருக்கையில் வீட்டு வாடிக்கையாளர்களை மாத்திரம் இலக்கிடப்பட்டு விற்பனைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

(இ) கூட்டிணைந்த திட்டத்தின் செயன் முன்னேற்றத்தை அளவிடக் கூடிய வகையில் ஒவ்வொரு நோக்கங்களையும் நிறைவேற்றுவதற்காக இலக்குகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

### 4.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

கூட்டிணைந்த திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட உயர் குணநலன்களுடன் கூடிய பாவனையாளர் சேவையைப் பேணுதல், வளங்களைப் பயன்படுத்தலும் முகாமைத்துவ வினைத்திறனை உயர்வடையச் செய்தலும் மீன்களது விலையை நிலைப்படுத்தும் பிரதிநிதியாக நடவடிக்கைகளை மேற்கொள்வதும் போன்ற நோக்கங்களை ஈடேற்றுவதற்கான செயற்பாடுகள் திட்டமிடப்பட்டிருக்கவில்லை.

### 4.3 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

பாராளுமன்ற பொது முயற்சிகள் மீதான கணக்குக் குழுவினால் பணிக்கப்பட்ட பின்வரும் பணிப்புரைகள் செயற்படுத்தப்படவில்லை.

(அ) 2006 ஆம் ஆண்டின்போது தனியார் கம்பனி ஒன்றுடன் ஏற்படுத்திக் கொண்ட கூட்டு வர்த்தக நடவடிக்கைகள் 2010 ஆம் ஆண்டளவில் செயலிழந்தமையால் அதில் முதலீடு செய்யப்பட்டுள்ள காணியின் உரித்தை மீண்டும் பெற்றுக்கொள்ளுதல்.

(ஆ) ரூபா 214.4 மில்லியன் நிலுவைக் கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

(இ) 2017 ஆம் ஆண்டு முதல் எதிர்கால திட்டங்கள் உள்ளடக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு ஒரு மாதத்திற்குள் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளல்.

(ஈ) ஐரோப்பிய சங்கத்தினால் விதிக்கப்பட்ட தடைகளை அகற்றும் வரை மீனவர்களின் மிகை மீன் அறுவடையை கொள்வனவு செய்வதற்காக திறைசேரி நிதி ஏற்பாட்டின் பேரில் ஆரம்பிக்கப்பட்டிருந்த தூனா செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட கூறுவிலைகளிலிருந்து விலகி அப்போதைய உப தலைவரின் அங்கீகாரத்தின் பேரில் மீன் இருப்பு கொள்வனவு மற்றும் விற்பனை செய்யப்பட்டதன் காரணமாக 02 வார காலப்பகுதிக்காக ரூபா 47,359,695 ஆன நட்டம் தொடர்பாக பொது முயற்சிகள் குழுவின் கட்டளையின் பிரகாரம் அமைச்சரின் பரிந்துரை பணிப்பாளர் சபை கலந்துரையாடல்கள், தூனா செயற்திட்டத்திற்காக சாத்தியவள ஆய்வொன்றை மேற்கொள்ளல், கூறுவிலைகளை தீர்மானித்தல், விலை தீர்மானிக்கும் குழுவொன்று காணப்படல் போன்ற தகவல்கள் தொடர்பான அறிக்கையொன்று 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படாமை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) வருமானக் கட்டுப்பாடு | - நிறைவேற்றாளரால் மேற்கொள்ளப்படும் மீன் விற்பனை தொடர்பான வருமானத்தை அறவிடுதல் நலிவுற்ற நிலையில் இருந்தமை மற்றும் பல ஆண்டுகளாக நிலுவையாக இருந்த வருமானத்தை அறவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்தமை |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | - அங்கீகரிக்கப்பட்ட பாதீடு செய்யப்பட்ட கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை. |
| (இ) கையிருப்புக் கட்டுப்பாடு | - அதிஉயர் கையிருப்பு மட்டம் தீர்மானிக்கப்படாமையும் கையிருப்பை வழங்கும் விதிமுறைகளும் அறிமுகஞ் செய்யப்படாமை மற்றும் பயன்பாட்டிற்கு பொருத்தமற்ற கையிருப்பு நிலவுதலும். |
| | - தரம் குறைந்த கையிருப்பைக் களஞ்சியப்படுத்தல். |
| | - கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான மீன்களை சந்தைப்படுத்தலில் முறையான விதிமுறை இல்லாமை |
| | - பயன்பாட்டிற்கு பொருத்தமற்ற மீன்களை நல்லநிலையில் உள்ள மீன்களுடன் களஞ்சியப்படுத்தல். |

(ஈ) சொத்துக்கள் பயன்பாடு

- வெளித்தரப்பினரிடமுள்ள மீன்கள் முறையாக குளிரூட்டப்படாமை காரணமாக அவற்றை மீள குளிரூட்டுவதற்காக மேலதிக கிரயமொன்று மேற்கொள்ள நேர்கின்றமை.

- குளிரூட்டி அறையில் மீன்களை களஞ்சியப்படுத்தும் போது தரக்கட்டுப்பாடு உத்தியோகத்தர்களால் களஞ்சியத்திற்கு கிடைக்கும் மீன் இருப்பு தரமாக இருப்பதாக சான்றுறுதிப்படுத்தாமை.